<td>26) மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி – கும்பகோணம் சாலை Back Bone Sewer-ல் கண்ணாரத்தெரு ஜெனிபர் சுவிட் கடை அருகில் மழைக்காலங்களிலும், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்திருந்த காலக்கட்டத்திலும் அமைக்கப்பட்ட கழிவுநீர் குழாயினை தற்போது நிலத்தடி நீர் மட்டம் மற்றும் மழைக்காலமாக இல்லாததாலும் தற்போது கொரோனா தொற்று ஊரடங்கு காலமாதலாலும் இப்பணி செய்ய ஏற்ற காலம் ஆதலால் இப்பணிக்கு மாற்றம் செய்ய வேண்டிய சிமெண்ட் பைப் மாற்றும் செய்து DI பைப்பாக மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.<br><br>
ஆகவே ஜெனிபர் சுவிட் கடை அருகில் பழுது நீக்கம் செய்யப்படும் இடத்தில் மாற்ற வேண்டிய 600.00 மி.மீ பைப் மற்றும் 15 தினங்களுக்கு பழுது நீக்கம் செய்யப்பட வேண்டிய இடத்தில் கழிவுநீரை மாற்று பாதையில் ஆயில் இஞ்சின் மற்றும் மாற்று குழாய் அமைத்து கழிவு நீரை தேங்காமல் பார்த்துக் கொள்ளும் அளவிற்கு ஆயில் இஞ்சின் வாடகைக்கு 15 தினங்களுக்கு இரைக்கவும் அதற்குண்டான பைப் புதியதாக வாங்குவதற்கும் ஆயில் இஞ்சின் வைத்து கழிவு நீர் இரைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
ந.க.எண். 2072 /2021/இ1</td>
<td>தீர்மான எண்.1037<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **17.05.2021** | 27) மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி – தற்போது கோடைக்காலம் என்பதால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது. கழிவுநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு அவ்வப்போது சாலையில் கழிவுநீர் வழிந்தோடுவதுடன் சாலையில் குண்டு குழி ஏற்பட்டு பொதுமக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறாகவும் அவ்வப்போது வெளிவரும் கழிவுநீர் தூர்நாற்றத்தால் சுகாதாரக்கேடு சம்பந்தமாக இந்த உடைப்பு பணிகளை உடன் சரிசெய்ய வேண்டும். அதாவது பூம்புகார் சாலையில் RTO அலுவலகம் எதிரில் குழாய் உடைப்பு, கால் டாக்ஸி குழாய் உடைப்பு, பெரிய கடைவீதி குழாய் உடைப்பு & ரேவதி நகர் குழாய் உடைப்பு போன்ற இடங்களிலுள்ள உடைப்பினை பழுது நீக்கம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 2074 /2021/இ1** | **தீர்மான எண்.1038**<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **17.05.2021** | 28) மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி கழிவுநீர் உந்து நிலையம் PS.4 முதல் PS.8 வரை புதிதாக 450mm CI பைப் தனி லைன் அமைக்க PS.4லிருந்து கிளைச்சிறைசாலையின் அருகிலுள்ள மெயின் BBS-2 கழிவுநீர் பிரதானக் குழாயில் விடப்பட்டுள்ளது. அதனை மாற்றி PS.8லிருந்து புதிதாக மாற்றப்பட்டு கீழவீதி வரை 450mm CI பைப் இணைக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது. ஆனால் PSC பழைய சிமெண்ட் பைப்பில் இணைக்கப்பட்டுள்ளதால் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு சாலைகளில் வழிந்தோடி பொதுமக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். ஆகவே தெற்கு வீதியிலுள்ள PSC சிமெண்ட் பைப்பையும் மாற்றி CI 450mm பைப்பாக மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே அய்யாரப்பர் தெற்கு வீதி பழைய சிமெண்ட் பைப்பை மாற்றி புதிய CI பைப் மாற்ற உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 2071 /2021/இ1** | **தீர்மான எண்.1039**<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **மயிலாடுதுறை நகராட்சி**<br><br>**2021–ம் ஆண்டு மே மாதம் – 31 ஆம் தேதி திங்கள் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**<br>**முன்னிலை:– திரு.கா.சுப்பையா.,**<br>**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**<br>**மயிலாடுதுறை நகராட்சி** | |
| **மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்** | **வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்** | **தீர்மானம்** |
| **31.05.2021** | **1)** மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி – கண்ணாரத்தெரு Back Bone Sewer-I முதல் கழிவுநீர் உந்து நிலையம் எண்.4 வரை ஏற்பட்டுள்ள கசிவு/உடைப்புகளை சீர்செய்யும் பணிக்கு 03.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.கே.மயில்வாகனன் என்பவர் பெயரில் திரு.செல்வகணபதி என்பவர் ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். மேற்படி ஒப்பந்ததாரர் பாதாள சாக்கடை பணியினை எப்போதும் மெதுவாக தான் செய்வார் நகராட்சி முன் பணம் கொடுத்தால் தான் பணி செய்ய முடியும் என்று தெரிவிப்பார். மேலும் இது குறித்து நிர்வாக ரீதியாக பேசினால், நகராட்சி ஆணையரை “போடா மயிறு” என்று (Unparliment word) கூறி நன்னடத்தை விதிகளை மீறுகிறார். நகரில் உள்ள பாதாள சாக்கடை மேன்ஹோலில் உள்ள அடைப்புகளை எடுப்பதில் மிகவும் காலதாமதம் செய்கிறார். நகராட்சி நிர்வாகத்தின் நலன் கருதியும், நகராட்சி அலுவலர்களின் சுயமரியாதையினை காப்பாற்றும் பொருட்டும் மேற்படி ஒப்பந்ததாரருக்கு இனிவரும் காலங்களில் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் வழங்க கூடாது. எனவே மேற்படி பணிக்கான ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்து மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 7724/99/இ1** | **தீர்மான எண்.1047**<br><br>மயிலாடுதுறை நகராட்சியின் பாதாள சாக்கடை AMC எடுத்துக்கொண்டு எந்த ஒரு Manhole–லிலும் கடந்த ஆண்டுகளில் அடைப்புகளை எடுக்காததன் காரணமாக சாக்கடை நீர் வெளியோறி சாலைகளில் வழிந்தோட சம்மந்தப்பட்ட நபர் முழு முதற் காரணமாகிறார்.<br>நிர்வாகரீதியாக கேட்டால் unparlimentword பயன்படுத்துகிறார். நிர்வாக நலன் கருதியும் , அதிகாரிகளின் சுய கவுரவம் காக்கப்பட வேண்டும் என்ற அத்தியாவசியம் கருதியும் திரு.செல்வகணபதி மற்றும் அவரின் இரத்த சம்பந்நமான உறவுகளுக்கு இனிவரும் காலங்களில் எந்தவொரு திட்டப்பணிகளும் வழங்கக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது. இதன் அடிப்படையில் மனு ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதிக்கப்பகின்றது. |

| | | |
|---|---|---|
| 31.05.2021 | **2)** மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி – கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewerage Treatment Plant) Inlet Pond-ல் மண் நிரம்பியுள்ளதால் அந்த மண்ணை அப்புறப்படுத்த 20.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.கே.மயில்வாகனன் என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை இந்நகர்மன்ற தீர்மான எண்.868 நாள்:28.10.2020ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரர் பாதாள சாக்கடை பணியினை எப்போதும் மெதுவாக தான் செய்வார் கேப்பில் நகராட்சி பணம் கொடுத்தால் தான் பணி செய்ய முடியும் என்று இருப்பார். மேலும் நகராட்சி ஆணையரை “போடா மயிறு” என்று (Unparliment word) கூறி நன்னடத்தை விதிகளை மீறியுள்ளார். நகரில் உள்ள பாதாள சாக்கடை மேன்ஹோலில் உள்ள அடைப்புகளை எடுப்பதில் மிகவும் காலதாமதம் செய்கிறார். நகராட்சி நிர்வாகத்தின் நலன் கருதியும், நகராட்சி அலுவலர்களின் சுயமரியாதையினை காப்பாற்றும் பொருட்டும் மேற்படி ஒப்பந்ததாரருக்கு இனிவரும் காலங்களில் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் வழங்க கூடாது. எனவே மேற்படி பணிக்கான ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்து மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 2814/2020/இ1** | **தீர்மான எண்.1048**<br><br>மயிலாடுதுறை நகராட்சியின் பாதாள சாக்கடை AMC எடுத்துக்கொண்டு, எந்த ஒரு Manhole–லிலும் கடந்த ஆண்டுகளில் அடைப்புகளை எடுக்காததன் காரணமாக சாக்கடை நீர் வெளியோறி சாலைகளில் வழிந்தோட சம்மந்தப்பட்ட நபர் முழு முதற் காரணமாகிறார். நிர்வாகரீதியாக கேட்டால் unparlimentword பயன்படுத்துகிறார். நிர்வாக நலன் கருதியும் , அதிகாரிகளின் சுய கவுரவம் காக்கப்பட வேண்டும் என்ற அத்தியாவசியம் கருதியும் திரு.செல்வகணபதி மற்றும் அவரின் இரத்த சம்பந்தமான உறவுகளுக்கு இனிவரும் காலங்களில் எந்தவொரு திட்டப்பணிகளும் வழங்கக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது. இதன் அடிப்படையில் மறு ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதிக்கப்பகின்றது |
| 31.05.2021 | **3)** மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN 82 A 0658 எண்ணுள்ள ஈப்பு வாகனத்தில் பேக் வீல், பேரிங், வைபர் மோட்டார் சர்வீஸ், டைனமோ கிட் ஸ்விட்ச் மற்றும் பிரேக் லைனிங் ஆகிய பழுதுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச செலவீனம் ரூ.9,200/- (ருபாய் ஒன்பதாயிரத்து இருநூறு மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் உள்ளுர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s ELANGO AUTOMOBILES, MAYILADUTHURAI நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>**ந.க.எண். 2168/2021/இ1** | **தீர்மான எண்.1049**<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |

| | | |
|---|---|---|
| 31.05.2021 | **4)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரம் தற்போது வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கையின்கீழ் நகரில் உள்ள வீடுகளுக்கு தினந்தோறும் ஆய்வு செய்திடுவதற்காக வளரும் நிலா மகளிர் சுய உதவிக்குழு மற்றும் ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுய உதவிக்குழுவிலிருந்து ஏற்கனவே 30 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் மயிலாடுதுறை நகர்பகுதிகளில் நோய் பரவுவதை கடுப்படுத்திடவேண்டும் என்பதற்காக வீடு வீடாக பரிசோதனைகள் செய்வதற்காக DBC பணியாளர்களை அதிகரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட கண்காணிப்பு அலவலர் அவர்கள் ஆய்வு வட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே வளரும் நிலா மகளிர் சுய உதவிக்குழு மற்றும் ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுய உதவிக்குழுவிலிருந்து ஏற்கனவே பணிபுரியும் பணியாளர்களுடன் கூடுதலாக இரண்டு குழுக்களிலிருந்து 30 பணியாளர்கள் பணிபரிவதற்கும் அனுமதியும், மேலும் இரண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களின் பணியாளர்கள் 01.05.2021 முதல் 30.06.2021 வரை 2 மாத காலத்திற்கு பணியமர்த்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.18,00,000/- (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்) ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** நகராட்சியில் கொரோனா நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து பணியாளர்கள் பணிபுரிய வேண்டியுள்ளதால் ஏற்கனவே நோய் தடுப்பு நடவடிக்கைகளில் பணிபுரிந்த 1.சாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு, 2.வளரும் நிலா மகளிர் சுயஉதவிக்குழுவிலிருந்து ஒரு குழுவிற்கு 30 நபர்கள் வீதம் 60 பணியாளர்கள் 01.05.2021 முதல் 30.06.2021 வரையில் பணிபுரிவதற்கு அவசியம் அவசரம் கருதி அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி தொகை கொரோனா நிதியிலிருந்து விடுவிக்கலாம்.<br>**ந.க.எண்.1302/2020/எச்1** | **தீர்மான எண்.1050**<br><br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து** |
| 31.05.2021 | **5)** மயிலாடுதுறை நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு 2021–2022ம் ஆண்டிற்கு சமையல் மற்றும் ஊதிய செலவனத்திற்கு உத்தேச தொகை ரூ.15,00,000/–க்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.9412/2014/அ** | **தீர்மான எண்.1051**<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |
| 31.05.2021 | **6)** இந்நகர்மன்ற தீர்மான எண்.926, 31.12.2020ன்படி மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்கள் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 21.05.2021 அன்று வைக்கப்பட்டதில் இனம் எண்.29, மயிலாடுதுறை பகுதி ஆராயக்குளம் மேல்கரை மற்றும் வடகரையிலுள்ள பலன் தரும் 20 தென்னை மரங்கள் பொது ஏலத்தில் ஒரே ஒரு நபர் மட்டும் கலந்து கொண்டு ஆண்டு குத்தகை தொகையாக ரூ.4100/–க் திரு. R. யோகேஷ் என்பவர் ஏலம் கேட்டுள்ளார். உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** ஒரே ஒருவர் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கேட்டுள்ளார், சென்ற ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் ஏலம் போகாததால் எந்த வருமானமும் இல்லை. நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு இதனை உறுதி செய்யலாம்.<br><br>**ந.க.எண்.4827/2020/அ2** | **தீர்மான எண்.1052**<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |

| | | |
|---|---|---|
| 31.05.2021 | 7) மயிலாடுதுறை நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவமால் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்பேரில் நகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் 14 சாலைகளில் பொது இடங்களில் உள்ள 52 மின்கம்பங்களில் ஒலி (ஒளி மின்ஒயர் அரோன் உள்பட) கொரோனா விழிப்புணர்வு விளம்பரங்கள் செய்திடுவதற்கு அறிவுறுத்தப்பட்டது. அதன்பேரில் பணியின் அவசரஅவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரியததால் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஜெமினி சவுண்ட் சர்வீஸ் நிறுவனம் மூலம் 18.03.2021 முதல் 06.05.2021 வரல 50 நாட்கள் விளம்பரம் செய்த வகையில் ரூ.315000/- ஆகும். தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் பணிமேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.1302/2020/எச்1** | **தீர்மான எண்.1053**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |
| 31.05.2021 | 8) இந்நகராட்சிக்கு சொந்தமான 2021–22ம் ஓராண்டு குத்தகை இனங்கள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 23.02.2021 அன்று வைக்கப்பட்டதில் நகராட்சி ஆடுவதை கூடத்தில் உள்ள மீன் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படும் சரக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு, செல்வசேகரன், என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ஆண்டுக்கு ரூ.50,500/– கேட்டுள்ளார். இதனை இந்நகர்மன்ற தீர்மான எண்.999, நாள்: 26.02.2021ன்படி அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி ஏலத்தொகை முழுவதும் செலுத்தக்கோரி ஏலதாரருக்கு இவ்வலுவலக 09.03.2021ந் தேதிய அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது. மேற்படி தொகை செலுத்தாததால் மேற்கண்ட இனத்தினை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br>**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.4827/2020/அ2** | **தீர்மான எண்.1054**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |
| 31.05.2021 | 9) மயிலாடுதுறை நகராட்சி தரங்கம்பாடி சாலையில் ஏற்பட்டுள்ள உடைப்பு-வெடிப்பு போர்கால அடிப்படையில் பொதுமக்கள் நலன்கருதி உடன் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது. முதல்கட்ட நடவடிக்கையாக தற்காலிகமாக ஆயில் இஞ்சின் பொருத்தியும், மின்மோட்டார் பொருத்தியும் வெடிப்பு ஏற்பட்ட இடத்தில் தேங்கும் கழிவுநீரை முதல் மேன்ஹோலில் இருந்து மற்றொரு மேன்ஹோலுக்கு கழிவுநீரை மாற்று பாதையில் தற்காலிகமாக குழாய் அமைத்து கழிவுநீரை அப்புறப்படுத்துதல், மேலும் உடைந்துள்ள கழிவுநீர் பிரதான குழாயினை மாற்றி புதிதாக 700mm விட்டமுள்ள DI பைப் மற்றும் 140mm விட்டமுள்ள பி.வி.சி. பைப் போன்றவைகள் பயன்படுத்தி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் ஆகும். மேலும் இரண்டாம் கட்டமாக இந்த பராமரிப்பு பணி செய்யும் இடத்தில் ஏற்பட்டுள்ள அதிபாதாள குழியினை மீண்டும் மீள் நிலைக்கு கொண்டு வர மீண்டும் மண் தோண்டி புதியதாக உள்வாங்கிய 700mm விட்டமுள்ள DI பைப்பினை பதித்து கழிவு நீரை கடத்த வேண்டுமாயின் தற்போது நடைபெற்றுக் கொண்டுள்ள தொடர் கன மழையின் காரணமாக பணியினை உடன் செய்ய சீட் பைலிங், ஜே.சி.பி, கிட்டாச், லாரிகள், ஆயில் இஞ்சின், டேங்கர் லாரி போன்ற இயந்திரங்களும் வைத்துக் கொண்டு பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சம். மேலும் இரண்டு கட்ட பணியினையும் முடிக்க ஆக கூடுதல் மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)ஆகும். இதனை நகராட்சிகளின் சட்ட விதி 15 பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண். 7724/99/இ1** | **தீர்மான எண்.1055**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |

**31.05.2021**

**10)** இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 25.02.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் விபரம் | மதிப்பீடு ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள மூன்று நிறுவனங்களின் பெயர் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி - ஆரம்ப சுகாதார நிலையத்தினை சீர்செய்யும் பணி. | 25,000/- | **Thiru. G.ELANCHEZHIYAN, No.32, Town Station South Side, Mayiladuthurai - 609 001.** | ரூ. 24,700/– குறைவு | **Thiru. G.ELANCHEZHIYAN, No.32, Town Station South Side, Mayiladuthurai - 609 001.** |
| | | | **Thiru. B.SHANMUGA BHARATHI, No.2, Pattamangala Arayath Street, Kenikarai, Mayiladuthurai - 609 001.** | ரூ. 26,300/– அதிகம் | |
| | | | Thiru.K.Saravanan, 4,1 E Main Road, Kumbakonam. | ரூ. 28,000/– அதிகம் | |

அலுவலககுறிப்பு :

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 0508/2021/இ1

**தீர்மான எண்.1056**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 31.05.2021 | **11)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை பராமரிப்பு பணி தரங்கம்பாடி சாலையில் உள்ள தம்பிக்கு நல்லான் பட்டினம் பள்ளியிலுள்ள மின் மோட்டார் இணைப்பு எண்: 522/023/2169-ஐ மாற்றி அமைத்து சாலையின் ஓரத்தில் சிறு கட்டை அமைத்து EB பாக்ஸ் மற்றும் மீட்டர் வைக்க உத்தேச செலவீனம் ரூ.45,000/-(ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதி 15ன் கீழ் இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thiru.G.ELANCHEZHIYAN அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 0922/2021/இ1 | தீர்மான எண்.1057<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |
| 31.05.2021 | **12)** மயிலாடுதுறை நகராட்சியில் ஐந்து எண்ணிக்கை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், முடிகண்டநல்லூர் தலைமை நீரேற்று நிலையம், Housing Board motor இயக்குதல், நீரேற்றம் செய்யும் பணிகள், வண்டிப்பேட்டை மோட்டார் இயக்குதல் மற்றும் அவ்வப்போது வரும் குடிநீர் தொடர்பான புகார்களை ஆராய்ந்து அதனை சீர்செய்து பழுது நீக்கம் செய்வதற்கும் குடிநீர் பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதாலும், மேலும் அத்தியாவசியமான குடிநீர் பணியினை தங்கு தடையின்றி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஊதிய விகிதத்தில் 8 பணியாளர்களை ஜூலை 2021 முதல் டிசம்பர் 2021 வரை (6 மாதங்களுக்கு) அமர்த்தி பணி மேற்கொண்டிட தேவையான மதிப்பீடு தொகை ரூ.7,10,000/- (ரூபாய் ஏழு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 2465/2021/இ1 | தீர்மான எண்.1058<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |
| 31.05.2021 | **13)** மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அவர்கள் குடியிருப்பில் மின்சாரம் இல்லாத நேரங்களில் பயன்படுத்துக்கூடிய இன்வெட்டர் மற்றும் 150 AHL பேட்டரி முற்றிலும் சரிசெய்ய முடியாத அளவில் பழுது ஏற்பட்டுள்ளது. இதனை மாற்றி புதிய இன்வெட்டர் பேட்டரி வைத்திட உத்தேச செலவீனம் ரூ.30,000/-(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 2076/2021/இ1 | தீர்மான எண்.1059<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |

<table>
<tr><td>31.05.2021</td><td>

**14)** இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 19.05.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ எ ண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>விலைப்புள்ளி அளித்துள்ள மூன்று நிறுவனங்களின் பெயர்</th><th>மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்</th><th>குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td><td>6</td></tr>
<tr><td rowspan="3">1.</td><td rowspan="3">மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் குடியிருப்பில் இன்வெட்டர் மற்றும் 150 AHL பேட்டரி புதியதாக மாற்றும் பணி.</td><td rowspan="3">30,000/-</td><td>Thiru. G.ELANCHEZHIYAN, No.32, Town Station South Side, Mayiladuthurai - 609 001.</td><td>ரூ. 30,000/– மதிப்பீட்டு அளவு</td><td rowspan="3">Thiru. G.ELANCHEZHIYAN, No.32, Town Station South Side, Mayiladuthurai - 609 001.</td></tr>
<tr><td>Thiru.K.Saravanan, 4,1 E Main Road, Kumbakonam.</td><td>ரூ. 32,500/– அதிகம்</td></tr>
<tr><td>Thiru. B.SHANMUGA BHARATHI, No.2, Pattamangala Arayath Street, Kenikarai, Mayiladuthurai - 609 001.</td><td>ரூ. 35,000/– அதிகம்</td></tr>
</table>

அலுவலககுறிப்பு :

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ளThiru.G.ELANCHEZHIYAN,Mayiladuthurai அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 2076/2021/இ1

</td><td>

தீர்மான எண்.1060

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டு

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.05.2021 | 15) மயிலாடுதுறை நகராட்சி COVID-19 பாதிப்பு குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகம் கொரோனா பாதுகாப்பு மையம் கூடுதலாக அமைக்க வேண்டும் என நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்பொருட்டு அரசு மருத்துவமனைக்கு பதிலாக கூடுதலாக வரும் கொரோனா நோயாளிகளை மாற்று ஏற்படாக செயின்ட் பால்ஸ் பள்ளியில் அமைத்து தர வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் வலியுறுத்தலின் பேரில் அந்த பள்ளியில் நோயாளிகளுக்கு ஒதுக்கப்படும் கட்டிடத்திற்கும் பள்ளி நிர்வாகத்திற்கும் தொடர்பு ஏற்படா வண்ணம் இரும்பு தகட்டால் ஆன தடுப்பு சுவர் வாடகை அடிப்படையில் அமைத்திடவும், பொது சுகாதாரம் ந.க.எண்.149/2021/A1 நாள்:13.05.2021ம் தேதிய PMO கடித்தின்படி அடிப்படை வசதிகள் கோரி கடிதம் வரைவு பெறப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்ட அடிப்படை வசதிகள் 1. இரும்பு தகட்டால் தற்காலிக கூடம் அமைத்தல். மற்றும் இரும்பு தகட்டால் கொரனா கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு தடுப்பு அமைத்தல். 2) பிளக்ஸ் போர்டு அடித்தல் (கொரனா தொடர்பான வாசகங்கள்) 3) புதிதாக பிளாஸ்டிக் சேர் வாங்கி வழங்குதல் இம்மூன்றும் உடனடியாக செய்து தர வேண்டும் என மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளபடி அடிப்படை வசதிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வ.எண்.1 மற்றும் 2 ல் உள்ளுர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.சண்முகசுந்தரம், மயிலாடுதுறை, மற்றும் வ.எண்.3ல் உள்ள பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thiru.L.RAJESWARAN & CO., MAYILADUTHURAI ஆகியோர்களின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 0922/2021/இ1 | தீர்மான எண்.1061<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| **31.05.2021** | **16)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்க்கண்ட மோட்டார்கள் பழுதடைந்துள்ளது. இதனை உடன் சரிசெய்திட ஆகும் உத்தேச செலவீனம் ரூ.7,00,000/- (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து நகராட்சிகளின் சட்டவிதி எண்.15ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.1062**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

பழுது நீக்க வேண்டிய மோட்டார் பம்புகளின் விபரம்

| வ.எண் | மோட்டார் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | **20 HP sewage non-clog motor (Sl.No. 81435)** | **1 No** |
| 2 | **10 HP sewage non-clog motor (Sl.No.79553)** | **1 No** |
| 3 | **8 HP sewage non-clog motor (Sl.No.79546)** | **1 No** |
| 4 | **4 HP sewage non-clog motor (Sl.No.79532)** | **1 No** |
| 5 | **2 HP sewage non-clog motor(Sl.No.79531)** | **1 No** |

**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் பதிவு செய்யலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s Aish Technologies, Chennai-58அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.7724/99/இ1**

| | | |
|---|---|---|
| 31.05.2021 | 17) தற்சமயம் கொரோனா இறப்பு அதிகமாக உள்ள காரணத்தினால் Gasifier Crematorium-ல் எரியூட்டப்படும் பிரேதங்களை கண்காணிக்கும் பொருட்டு அனைத்து Gasifier மயானங்களில் 5 எண்ணிக்கை CCTV Camera, 1 எண்ணிக்கை Monitor மற்றும் அதற்குண்டான cable மற்றும் wiring பணிகளை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவிற்கிணங்க போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டதால் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.70,000/-(ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சிகளின் சட்டவிதி எண்.15ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் உள்ளுர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thiru.G.ELANCHEZHIYAN, Mayiladuthurai அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 2307/2021/இ1 | தீர்மான எண்.1063<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |
| 31.05.2021 | 18) மயிலாடுதுறை நகராட்சியில் அமைந்துள்ள தருமபுரம் ஆதின கலைக்கல்லூரியில் கொரோனா சிறப்பு சிகிச்சை மையம் அமைய உள்ளதால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மேற்படி இடத்தினை தல பார்வையிட்டதில் கழிப்பறையில் European closet பதியவும், வளாகத்தினை சுற்றி LED light fitting அமைக்கவும் மற்றும் கழிப்பறைகளில் பயன்படுத்தகூடிய வாளி மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.55,000/-(ரூபாய் ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சிகளின் சட்டவிதி எண்.15ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் உள்ளுர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thiru.G.ELANCHEZHIYAN, Mayiladuthurai அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 2306/2021/இ1 | தீர்மான எண்.1064<br><br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்து |